பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50

சுடர்: 5 பிரமோதூத ஞூ ஆவணி மீ 26 உ செவ்வாய்க்கிழமை (11-09-1990) ஹிஜ்ரி 1410 ஸபர் பிறை 21 கதிர்: 191

# ஈழத் தமிழ் அகதிகள் விடயம் 'காமன்வெல்த்' மாநாட்டில்!

## தமிழக உபசபாநாயகர் தகவல்

சென்னை, செப். 11

இம்மாத இறுதியில் ஹராரேயில் நடைபெறும் பொதுநல அமைப்பு (காமன்வெல்த்) நாடுகளின் மாநாட்டில், ஈழத்தமிழ் அகதிகள் பெரும் எண்ணிக்கையில் தமிழகம் செல்வது சம்பந்தமான விடயம் எழுப்பப்படும்.

இத் தகவலை இந்தியத் தரப்பில் பிரஸ்தாப மாநாட்டில் கலந்துகொள்ளும் குழுவில் அங்கம் வகிக்கும் தமிழக சட்டசபை உப சபாநாயகர் திரு. வி.பி, துரைசாமி நேற்றுத் தெரிவித்தார்.

பொதுநலவாய நாடாளுமன்றங்கள் அமைப்பின் வருடாந்த மாநாடு இம்முறை ஸிம்பாப்வே தலைநகர் ஹராரேயில் இம் மாதம் இறுதி வாரத்தில் நடைபெற இருக்கிறது.

மாநாட்டில் கலந்துகொள்ளும் இந்திய நாடாளுமன்றக் குழுவுக்கு லோகசபை சபாநாயகர் ரபிராய் தலைமை வகித்துச் செல்வார் என்றும் தானும் அக் குழுவில் ஓர் உறுப்பினராகச் செல்வதாகவும் திரு. துரைச்சாமி தெரிவித்தார்,

இலங்கையிலிருந்து பெரும் எண்ணிக்கையான அகதிகள் தமிழ்நாடு வருவது, அதனை தடுக்கக்கூடிய அரசியல் சூழ்நிலையை இலங்கை அரசாங்கம் ஏற்படுத்தவேண்டியதன் அவசியம் என்பன குறித்து இந்தியக் குழு மாநாட்டில் பிரஸ்தாபிக்கும் — என்று திரு. துரைசாமி செய்தியாளர்களிடம் தெரிவித்தார். [அ-எ]

## யாழ். ஆஸ்பத்திரியில் ஒரு சிறுவனின் அவச்சாவு!

யாழ்ப்பாணம், செப். 11

யாழ். போதனா வைத்தியசாலை, பல வசதியீனங்களுடன், உரிய விதத்தில் மக்களுக்குச் சேவை செய்ய முடியாத கஷ்டத்துடன் இப்போது மானிப்பாயில் இயங்குகிறது என்பது அங்கு சென்றவர்களுக்கு தெரிந்த விடயம்.

ஆனால், அந்த வசதிகள் இல்லாததால் காப்பாற்றக் கூடிய உயிர்களையும் டாக்டர்களால் தப்பவைக்க முடியாமல் இருக்கிறது என்பது இப்போதுதான் மெதுமெதுவாக வெளிச்சத்துக்கு வந்து கொண்டிருக்கிறது.

சுன்னாகத்தைச் சேர்ந்த மு. ஜெயதரன் என்ற 10 வயதுச் சிறுவனின் மரணம் மானிப்பாய் ஆஸ்பத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வந்தாறுமூலை அகதி முகாமில் 101 தமிழரைக் காணவில்லை!

கொழும்பு, செப். 11

மட்டக்களப்பு வந்தாறுமூலையில் உள்ள கிழக்கிலங்கைப் பல்கலைக் கழக அகதி முகாமில் தஞ்சம் புகுந்திருந்த 101 அப்பாவித் தமிழர்களைக் காணவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

தமிழ்க் குழு ஒன்றை மேற்கோள்காட்டி ஏஜென்ஸி செய்திகள் இவ்வாறு தெரிவித்தன.

இவர்களைத் தவிர மேலும் 148 அப்பாவித் தமிழர்களை இராணுவத்தினர் அகதிமுகாமிலிருந்து கைது செய்து கொண்டு சென்றிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## மட்டக்களப்பில் கைதான 50 தமிழர் சுட்டு எரிப்பு?

கொழும்பு, செப் 11

மட்டக்களப்பு மாவட்டத்தில் குறைந்தது 50 அப்பாவித் தமிழர்களை இலங்கை இராணுவத்தினர் படுகொலை செய்த பின்னர் "டயர்" போட்டு எரித்ததாக தமிழ்க் குழு ஒன்றை மேற்கோள் காட்டி ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 3 இடங்களில் பொது மக்களைச் சுற்றி வளைத்த இராணுவத்தினர் சுமார் 50 தமிழரை அங்கிருந்து கூட்டிச் சென்று பின்னர் சுட்டுவிட்டு டயர்போட்டு எரித்துக் கொன்றனர் எனவும்-

இதில் ஒருவர் காயத்துடன் தப்பி மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். என்றும் அச்செய்தி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. ஸ்தானிகராலய அலுவலகம் பலத்த சேதம்

யாழ்ப்பாணம், செப். 11

ஞாயிற்றுக்கிழமை இரவு 11 45 மணி அளவில் கோவில் வீதியில் விழுந்து வெடித்த குண்டால் ஐ. நா. அகதிகள் ஸ்தானிகராலய அலுவலகம் பலத்த சேதமடைந்தது.

இந்த அலுவலகத்துக்கு ஒரு சில யார் தூரத்தில் குண்டு வீசப்பட்டது.

குண்டு வெடித்தபோது அலுவலகத்தின் ஜன்னல்கள், கதவுகள் சழன்று வீழ்ந்து உடைந்தன.

ஜன்னல் கண்ணாடிகள், "சீலிங்" கூரைகள் உடைந்து நொருங்கின.

அலுவலகக் கூரையில் "UN" என்று எழுதப்பட்ட எழுத்துகள் கொண்ட ஓடுகள் சிதறிக்கிடந்தன.

இந்தச் சேதங்கள் குறித்து கொழும்பில் உள்ள தலைமையகத்துக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ-3-6]

## இராணுவ அதிகாரிகளுக்கு மரண தண்டனை

பக்தாத், செப். 11

ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசேனை கொலை செய்யும் சதிமுயற்சியில் ஈடுபட்டதாகக் கூறப்படும் மூன்று ஈராக்கிய இராணுவ அதிகாரிகளுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதாக பக்தாத் செய்தி ஒன்று தெரிவித்தது. [ஒ-எ]

### 3ஆவது நாளாக நேற்றும்

## இரவு நேரத்தில் இலக்கின்றி குடியிருப்புகள் மீது தாக்கு!

யாழ். நகரில் நேற்றிரவும் மூன்றாவது நாளாக அவ்ரோ விமானம் குடியிருப்புப் பகுதிகள் மீது குண்டுகளை வீசியது.

முதலில் சுமார் 7-20 மணியளவில் அவ்ரோ நகருக்கு வந்தது. அதன் "உறுமல்" சத்தம் கேட்டவுடனேயே மக்கள் பதுங்கு குழிகளை நாடினர்.

ஆனால் எதுவித தாக்குதலையும் நடத்தாமல் அவ்ரோ 'நல்லபிள்ளை'யாக திரும்பிச் சென்றுவிட்டது.

அடுத்து எப்போது வருமோ என்று எதிர்பார்த்திருந்த வேளையில் — சுமார் 9-30 மணியளவில் மீண்டும் 'உறுமல்' சத்தம்.

நகருக்கு மேலே வட்டமிட்டது அது. இலக்கு எது என்று தெரியாமல் அடுத்தடுத்து 4 குண்டுகளைப் போட்டுவிட்டு உடனேயே திரும்பிச் சென்றுவிட்டது.

பெரும்பாலான நகர மக்கள் பதுங்கு குழிகளில் இருந்தனர்.

சேத விவரம் உடனடியாக கிடைக்கவில்லை. (ஒ)

## தீவுப் பகுதி மக்கள் மீது காலம் கடந்த 'பரிவு'!

யாழ்ப்பாணம், செப்டெம்பர் 11

இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட ஊர்காவற்றுறை மற்றும் அதனை அண்டிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் மீது அரசாங்கத்துக்கு காலம் கடந்த "பரிவு" ஏற்பட்டுள்ளது.

அப்பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்குத் தேவையான வைத்திய மற்றும் நிவாரண வேலைகளைக் கவனிக்க அங்கு செல்வதற்கு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவுக்கு நேற்றே பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியிருக்கிறது.

கடந்த மாதம் 22 ஆம் திகதி ஊர்காவற்றுறையில் இராணுவம் தரையிறக்கப்பட்டதை அடுத்து அங்கு இராணுவ நடவடிக்கை முடுக்கி விடப்பட்டது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். நகரின் பல பகுதிகளிலும் ஞாயிறு இரவு பீப்பாக் குண்டுவீச்சு!

யாழ்ப்பாணம், செப். 11

யாழ் நகரப்பகுதியில் இரண்டாவது நாளாக ஞாயிறு இரவும் அவ்ரோ விமானம் பீப்பாக்குண்டுகளை வீசியது.

அன்று இரவு 8.35க்கும், இரவு 11-45க்கும், பின்னர் அதிகாலை நான்கு மணிக்கும் 'அவ்ரோ' விமானம் வந்து குண்டுகளை வீசியது.

நல்லூர் கோவில் வீதியில் மூன்று குண்டுகள் வீசப்பட்டன. ஒருகுண்டு வெடிக்காத நிலையில் மீட்கப்பட்டது.

கஸ்தூரியார் வீதி நகைக்கடைப் பகுதியிலும் யாழ் வீதிப்பகுதியிலும் குண்டுகள் வீசப்பட்டன.

பத்துக்கும் மேற்பட்ட வீடுகளும், கராஜ் ஒன்றும், நகைக்கடை ஒன்றும் சேதமுற்றன.

இரண்டாம் மூன்றாம் தடவைகள் 'அவ்ரோ' வந்த போது விமானத்தின் சத்தம் கேட்டதும் ஆழ்ந்த நித்திரையில் இருந்த மக்கள் துடித்துப் பதைத்தெழுந்து பதுங்கு குழிகளில் தஞ்சமடைந்தனர். (இ-7-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ சின்னஞ்சிறு விளம்பரம் ★


### தேவை

சோயா தேவை தொடர்பு கொள்ளவும்: அண்ணா தொழிலகம், இணுவில். [சி/5192]

### விற்பனைக்கு

புதிய Model EV- G 10 வீடியோ டெக் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ஞா. குணதாஸ் 63, கொழும்புத்துறை வீதி, (பாண்டியன் தாழ்வு பேக்கவுஸ் அருகில், யாழ்ப்பாணம்) [14173]

### RATHY WATCH WORKS

மேற்படி ஸ்தாபனம் 12, பொன்னையா லேன் (உபதபால் நிலைய அருகாமையில் பிடாரி கோவிலடி) ஆறுகால் மடம் ஆனைக்கோட்டை யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் இயங்குகிறது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகிறோம். இங்கு திருத்த வேலைகள் மணிக்கூடு பற்றறி, விற்பனைகள் நடைபெறுகின்றது என்பதையும் அறியத்தருகிறோம். [13937]

### டவர் வோச் வேக்ஸ்

எமது ஸ்தாபனத்தாரிடம் திருத்துவதற்கு ஒப்படைத்த பொருட்களை 10 நாட்களுக்குள் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம். தவறின் பொருட்களுக்கு நாம் பொறுப்பாளிகள் அல்ல என்பதனை அறியத் தருகின்றோம். தொடர்பு: கோபாலகிருஷ்ணன். 234/4, மானிப்பாய் வீதி, சென் செபஸ்தியார் லேன், (ஓட்டுமடம் சந்திக்கருகாமை) யாழ்ப்பாணம். (இதுவே இறுதி அறிவித்தலாகும்) (14156)

### Dilka Watch Works

யாழ். நகரில் சகல கடிகாரங்களையும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள டில்கா வாச் வேச்ஸ், மானிப்பாய் வீதி. ஆனைக்கோட்டை. (கிராமசபைக்கு அருகாமை) [14158]

### கோழித்தீன்

நாம் தரமான கோழித்தீன் வகைகளை செய்து கொடுக்கிறோம். சிவா மில் அன் இன்டஸ்றீஸ், 46/1, பிறவுண்வீதி: 4 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (14159)

### இடமாற்றம்

அரஸ் ஜவுளியகம் இல: 146 நவீன சந்தை, யாழ்ப்பாணம் மண்டேலா ரேடர் (புத்தக சாலை) இல, 2. பஸ்நிலையம் ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம் ஆகியன தற்போது இல, 256, பருத்தித்துறை வீதி, (நல்லூர் தேரடி முன்பாக) நல்லூர் யாழ்ப்பாணம் என்ற முகவரியில் இயங்குகின்றன என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். [13938]

இராசா டீசல் என்ஜினியர்ஸ் 180, பருத்தித்துறை வீதியிலிருந்து தற்காலிகமாக 28/3 மணல் தறைலேன், கந்தர் மடம், யாழ்ப்பாணத்திற்கு இடம் மாற்றப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம். (14170)

### கண்டெடுக்கப்பட்டுள்ளது

நல்லூர் கோவிலுக்கு அண்மையில் கோவில் வீதியில் அரிசிப்பார்சல் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது உரியவர்கள் 351, கோவில் வீதி, நல்லூர் என்னும் முகவரியில் ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்ளவும். (சி/5194)

### தவறிவிட்டது

யாழ்ப்பாணம் அந்தோனிப்பிள்ளை தேவராசாவின் [''ஈழநாடு'' ஊழியர்) 401931902 V அடையாள அட்டை ஞாயிறு சுண்டிக்குளி பகுதியில் தவறி விட்டது. எடுத்தவர்கள் ''உதயன்'' காரியாலயத்தில் ஒப்படைக்கும்படி தயவாகக் கேட்டுக் கொள்கிறேன். [14177]


## விண்ணக வாழ்வின் 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**பொன்னுத்துரை ஜோர்ச் இராஜசேகரம்**

பிறப்பு: 30 - 03 - 1923

இறப்பு: 11 - 09 - 1986

''வாழ்வில் எம்மை
நேசித்தீர்
மரணத்தில் உம்மை
மறவோம்''

இவரின் ஆன்ம சாந்திக்காக 12 - 09 - 90 புதன் கிழமை கோப்பாய் புனித சூசையப்பர் ஆலயத்தில் மாலை 5 30 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்

அன்புடன் நினைவுறும்;
மனைவி, பிள்ளைகள்.
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
கோப்பாய் (14174)

# லைபீரிய ஜனாதிபதி டோ கிளர்ச்சிப் படையால் கைது

மொன்றோவியா, செப். 11

லைபீரியா ஜனாதிபதி சாமுவல் டோவைக் கிளர்ச்சிக் குழுக்களில் ஒரு பிரிவின் தலைவரான பிரின்ஸ் ஜோன்சன், சண்டை ஒன்றின் பின்னர் கைது செய்தார் என்று பி. பி. சி. வானொலி தெரிவித்தது.

அந்தச் சண்டையின்போது ஜனாதிபதி டோ படுகாயமடைந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

எட்டுமாத காலமாக நடைபெற்று வரும் சிவில் யுத்தத்தை நிறுத்த லைபீரியாவுக்குச் சென்றுள்ள மேற்கு ஆபிரிக்க அமைதிகாக்கும் படையின் தலைமை அலுவலகத்திற்கு நேற்று ஜனாதிபதி டோ திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டார் என்றும் —

அச்செய்தியைக் கேள்வியுற்ற கிளர்ச்சிக் குழுவினர் பிரின்ஸ் ஜோன்சன் தலைமையில் அத்தலைமை அலுவலகக் கட்டடத்தைச் சூழ்ந்து கொண்டனர் என்றும் —

அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட சண்டையின் போதே ஜனாதிபதி கைதானார் என்றும் தெரிவிக்கப்பட்டது

ஜனாபதி டோ இராணுவ நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்படுவார் என்று பிரின்ஸ் ஜோன்சன் அறிவித்தார் என்றும் பி. பி. சி. வானொலி தெரிவித்தது. (இ - எ)

## ஹெலித் தாக்குதல்

வல்வெட்டித்துறை, செப். 11

வடமராட்சிப் பகுதியில் மீண்டும் ஹெலித் தாக்குதல்கள் ஆரம்பமாகி உள்ளன. (இ-160)

## பிரதிப் பொலிஸ மா அதிபர்

கொழும்பு, செப். 11

பிரதி பொலிஸ் மா அதிபராக திரு. இக்னேஷியஸ் கனகரத்தினம் நியமிக்கப்பட்டிருக்கிறார். (இ-எ)

## பிறப்புறுதிப் பத்திரம்

யாழ்ப்பாணம், செப். 11

மானிப்பாயில் உள்ள யாழ். போதனா வைத்தியசாலைப் பிரிவில் தற்போது பிறப்புறுதிப் பத்திரம் வழங்கப்பட்டு வருகிறது. (இ - 15)


இறந்தவர்களின் சிறிய படங்களைப் பெரிய தாக்க விரும்புகிறீர்களா?
[Re - Copy, Enlargment, Framing & Blocks]
உடனே நாடுங்கள்

## கொழும்பு ஸ்ருடியோ

245, நாவலர் வீதி,
[ரெயில்வே கடவைக்கு அண்மையில்]
யாழ்ப்பாணம்.
[சி-5190]


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

திரு. பேரின்பநாயகம் மரிய அருமைநாயகம்
(பிரான்ஸ்)

பிறப்பு:
27 — 03 — 1959

இறப்பு:
13 — 08 — 1990

திருப்பலிப் பூசையில் பங்கு கொள்ளும்படி அழைக்கின்றோம்.

இடம்: புனித இசிதோர் ஆலயம், ஏழாலை.

காலம்: 12 09 90 புதன் கிழமை காலை 7 மணி

பெற்றோர், மனைவி,
உறவினர்.
[14178]

## தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம் (வரையுள்ளது)

### தட்டெழுத்து, சுருக்கெழுத்து மாணவிகளின் கவனத்திற்கு!

ஆங்கில தட்டெழுத்து. சுருக்கெழுத்து பிற்மன் லண்டன் பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்கள் அனைவரையும் 14 - 09 - 90 ஆந் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 00 மணிக்கு தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தருகில் அமைந்திருக்கும் எமது சங்க கந்தோரில் வந்து சந்திக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

பரீட்சையை நடாத்தி விடைத்தாள்களை இவ்வருடத்திற்குள் அனுப்ப வேண்டி இருப்பதால் குறிப்பிட்ட தவணைக்கு தவறாது சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

பொது முகாமையாளர்.

[சி-5189]

## அரசாங்க அறிவித்தல்

### மார்பு நோய் சிகிச்சை நிலையம் யாழ்ப்பாணம்

மேற்படி சிகிச்சை நிலையம் கோப்பாயில் தொடர்ந்து இயங்கிக் கொண்டு இருக்கிறபடியால், இந்நிலையத்தில் கடமையாற்றும் சகல ஊழியர்களையும் உடனடியாக வேலைக்குச் சமுகம் அளிக்கும் படி கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

ந. கனகசபை,
யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்.

10 - 09 - 1990. (சி, 5193)

## ஓராண்டு நினைவஞ்சலி



ஆண்டவன் படைப்பு:
15 - 06 - 1944

அநியாய அழிப்பு:
19 - 08 - 1989

திதி:
10 - 09 - 1990

### திரு. இராஜசிங்கம் [கிளி]

அன்பின் இருப்பிடமாய் குடும்பத்தின் ஒளிவிளக்காய் இருந்து எமக்கு ஒளிவீசிவிட்டு அணைந்துவிட்ட அன்புத் தெய்வமே ஓராண்டு சென்றாலும் உங்களைப் பிரிந்த துயர் மாறாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
அன்பு மனைவி, அருமை மகள்,
உற்றார், உறவினர்.

''வளர்மதி வா[illegible]
கன்பொல்லை வீதி, [illegible] [14161]

## மரண அறிவித்தல்

### திரு. செல்லத்துரை நடராசா
(Retd Registrar, High Court Jaffna)

திருநெல்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் பிரம்படி ஒழுங்கை கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. நடராசா கனடாவில் 22-08 90 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற அம்பிகாதேவி [ஆசிரியை] யின் அன்புக்கணவரும், சித்திரா [கனடா], செல்வகுமார் [கனடா], சுபத்திரா [கனடா], சேந்தன் [கனடா] ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. ந நிர்மலன் [கனடா]. திரு வே றூபன் [கனடா] ஆகியோரின் அன்பு மாமனாரும், வர்ஷினியின் அன்புப் பேரனும், லீலாவதி, சிவகாமசுந்தரி, காலஞ்சென்ற தேவசுந்தரி, கமலாவதி [ஆசிரியை திருநெல்வேலி றோ. க. பாடசாலை] ஆகியோரின் அன்புச்சகோதரனும், காலஞ்சென்ற திரு. இராமலிங்கம் [R. M P.], திரு. நடராசா, திரு. கனகசபை [M.L T.] ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 25 08-90 இல் ரொறொன்ரோ கனடாவில் நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாபேரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

செல்வி கமலாவதி செல்லத்துரை

பலாலி றோட்,
திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம். [14168]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுந்தீவுக்கு உணவுப்பொருள் அனுப்புமாறு அவசர கோரிக்கை

## 1,300 குடும்பங்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம், செப். 11
நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஏற்பட்டுள்ள பட்டினி நிலையைப் போக்க உடனடியாக உணவுப் பொருள்கள் அனுப்புமாறு அவசர கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவு கூட்டுறவு அதிகாரி இந்த அவசர கோரிக்கையைச் செஞ்சிலுவைச் சங்கத்துக்கும், கூட்டுறவு உதவி ஆணையாளருக்கும் விடுத்துள்ளார்.

அந்தக் கோரிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது:-

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள 1300 குடும்பங்களுக்கும் வள்ளச் சேவை நிறுத்தப்பட்டதால் கடந்த ஒரு மாதமாக உணவுப் பொருள்கள் அனுப்பப்படவில்லை.

கடந்தமாதம் 20 ஆம் திகதி நெடுந்தீவு ப. நோ. கூ. சங்கத்தில் 1100 கிலோ அரிசி மட்டுமே கையிருப்பில் இருந்தது. சீனியோ, மாவோ, பால்மாவோ இல்லை.

சனத்தொகையில் 85 சதவீதமானவர்கள் கடற்றொழில் செய்து அன்றாடம் உழைத்து வாழ்பவர்கள். அந்தத் தொழிலும் செய்ய முடியாத நிலையில் அவர்கள் உள்ளனர்.

ஒரு மாதத்துக்கு மேல் அரச படகு சேவைகள் நடைபெறவில்லை. அதேவேளை கடந்த இரண்டரைமாத காலமாகத் தனியார் வள்ளங்கள் சேவையில் ஈடுபடாததால் தனியார் வியாபாரிகளும் உணவுப் பொருள்களைக் கொண்டு செல்லமுடியாதுள்ளது.

ஆகவே உடனடியாக இந்த விடயத்தில் மனிதநேய அடிப்படையில் தலையிட்டு உணவுப் பொருள்களை அனுப்பவேண்டும்.

இப்படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (இ-3)

# இலங்கைவங்கிக் கிளைகள் உடனடியாக இயங்கமாட்டா

## உயர் அதிகாரி தகவல்

யாழ்ப்பாணம், செப். 11
இலங்கைவங்கிக் கிளைகளைப் புதிய இடம் எதிலும் உடனடியாக இயங்கவைக்கும் சாத்தியம் இல்லை.

இவ்வாறு இலங்கைவங்கியின் யாழ்ப்பாண உயர் அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

ஆஸ்பத்திரி வீதிக் கிளை, ஸ்ரான்லிவீதிக் கிளை ஆகியவற்றைமாற்றுவதற்கு உகந்த இடமாக பல்கலைக்கழக ஆனந்தக்குமாரசாமி விடுதியைத்தெரிவு செய்துள்ளோம். ஆனால் அங்கு வங்கியை உடனடியாக இயங்கச்செய்ய முடியாது - என்றும் அவர் தெரிவித்தார்.

வங்கிக் கிளைகளில் இருந்து ஆவணங்களை புதிய இடத்துக்கு எடுத்துச் செல்லமுயற்சி மேற்கொண்டுள்ளோம் -

ஊரடங்குச்சட்டம் நீக்கப்பட்ட பின்பே பணக்கொடுக்கல் வாங்கல் நடைபெறமுடியும் - என்றும் அவர் தெரிவித்தார்.

எனினும் வங்கிக்கிளைகளை இடம் மாற்றும்முடிவை கொழும்பில் தலைமையகத்துக்குத் தெரியப்படுத்திவிட்டோம் - எனவும் அவர் சொன்னார். [அ-3]

# மட்டக்களப்பு நகரக் கடைகள் இன்னும் மூடப்பட்ட நிலையில்

மட்டக்களப்பு, செப். 11
மட்டக்களப்பு நகரிலும், முக்கிய இடங்களிலும் உள்ள வர்த்தக நிலையங்கள் தொடர்ந்து மூடப்பட்டுள்ளன.

வீதிகளில் அமைக்கப்பட்டுள்ள நடைபாதைக் கடைகளிலேயே மக்கள் பொருள்களை வாங்குகிறார்கள்.

அங்கு சீனி ஒரு கிலோ 30 ரூபாவாகவும், மா ஒருகிலோ 15 ரூபாவாகவும், பருப்பு ஒரு கிலோ 50 ரூபாவாகவும், லக்ஸ்பிறே 52 ரூபாவாகவும, உப்பு ஒரு கிலோ 4 ரூபாவாகவும், தேங்காய் எண்ணெய் 1 போத்தல் 18 ரூபாவாகவும் விற்பனையாகின்றன.

இங்கு பொருள்களுக்கு தட்டுப்பாடு இல்லாத போதிலும் பணப்புழக்கம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

# படுகொலைகள் - பட்டினிச்சாவு: அம்பாறைத் தமிழர் அவல நிலை

அம்பாறை மாவட்டத்தில் 200க்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழர்கள் ஸ்ரீலங்காப் படையினராலும், முஸ்லிம் கும்பல்களினாலும் படுகொலை செய்யப்பட்டது தொடர்பாக விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி கடந்த முதலாம் திகதி விடுத்த அறிக்கை முழு விவரம் வருமாறு:-

ஆகஸ்ட் 1 ஆம் திகதி தொடக்கம் 27 ஆம் திகதி வரை அம்பாறை மாவட்டத்தில் 200 க்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் விசேட அதிரடிப்படைகளாலும், முஸ்லிம் கும்பல்களாலும் கொல்லப்பட்டுள்ளனர். தமிழீழ — ஸ்ரீலங்காப் போர் ஜூன் 11இல் ஆரம்பித்ததில் இருந்து ஆகஸ்ட் 27 வரை 1879 அப்பாவித் தமிழ் மக்கள் அம்பாறை மாவட்டத்தில் கொல்லப்பட்டு உள்ளனர். கிழக்கு மாகாணத்தில் வாழும் தமிழ் மக்கள் பட்டினிச் சாவை சந்தித்துக்கொண்டிருக்கின்றனர்.

மட்டக்களப்பில் கடந்த மாதம் 10 குழந்தைகளுக்கு மேல் போதிய உணவின்றி உயிரிழந்தன. இதுவரை எந்த சர்வதேச அமைப்பும் இந்த மக்களுக்கு உதவ முன்வரவில்லை. அதேவேளை இந்த மக்களுக்கு உணவு கூட கிடைக்கவில்லை. அரச பயங்கரவாதிகள் இவர்களுக்கு உணவு கிடைப்பதை திட்டமிட்டு தடைசெய்து வருகின்றனர்.

இதுவரையில் கிழக்கு மாகாணத்தில் இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கு உணவு கிடைக்காமல் முழுமையாக தடை செய்யப்பட்டுள்ளது.

யாழ் மாவட்டத்தில் ஸ்ரீலங்காப்படை நடவடிக்கை மூலம் ஊர்காவல்துறை, புங்குடுதீவு, மண்டைதீவு சேர்ந்த 300க்கும் மேற்பட்ட பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இதுவரை ஏற்பட்ட 14 நாட்களாக இப்பகுதியில் வாழும் மக்களுக்கு சரியான முறையில் உணவோ, மருத்துவவசதிகளோ கிடைக்கவில்லை.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் அங்கு சென்று காயமடைந்தவர்களை அழைத்து வந்து வைத்திய வசதி செய்ய ஸ்ரீலங்காவிடம் அனுமதி கேட்டபோது ஸ்ரீ லங்கா இதுவரை அதற்கு அனுமதி கொடுக்க இல்லை. அதேவேளை அப்பகுதிக்கு உணவு கொண்டு செல்வதையும் தடை செய்துள்ளது.

சர்வதேசத்தை ஏமாற்ற பெரிய அளவில் பொய்ப்பிரசாரங்களைச் செய்து வரும் ஸ்ரீலங்கா திட்டமிட்டு மறைமுகமாக தமிழீழ மக்களை இனப்படுகொலை செய்து வருகின்றது. இப்படி அறிக்கையில் [illegible]

# யாழ். நகரப்புற மக்களுக்கு இந்து மகளிர் கல்லூரியில் இன்று தபால் விநியோகம்

யாழ்ப்பாணம், செப். 11
யாழ். பிரதம தபாற்கந்தோரின் விநியோக எல்லைக்கு உட்பட்ட விலாசதாரர்களுக்குரிய கடிதங்கள் இன்று விநியோகிக்கப்படும்.

இராணுவ நடவடிக்கையால் பெரிதும் பாதிக்கப்பட்டு - பொது மக்கள் இடம்பெயர்ந்துள்ள குருநகர், பாசையூர், கொட்டடி, முஸ்லிம் வட்டாரம், 1, 2, 3, 4,5 ஆம் குறுக்குத் தெருக்கள், மாட்டின் வீதி, பிரதான வீதி, ஸ்ரேசன் பகுதி, பழைய பூங்கா வீதி, கன்னாதிட்டி, பெரியகடை, பஜார் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த விலாசதாரர்களுக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் வைத்து கடிதங்கள் விநியோகிக்கப்படும்.

இப் பகுதி மக்கள் மாத்திரம் இன்று காலை 9.00 மணி முதல் 2 00 மணி வரை இக்கல்லூரியில் கடிதங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என மாகாண தபால் அத்தியட்சகர் தெரிவித்தார். (இ-7)

## அகதிகள் படகு கவிழ்ந்தது

கிளாலியிலிருந்து இந்தியாவுக்கு சென்ற அகதிகள் படகு நாச்சிக்குடாப் பகுதியில் கவிழ்ந்தது.

இதில் பயணம் செய்தமுப்பது பேரும் வள்ள ஓட்டியின் திறமையினால் காப்பற்றப்பட்டு கரை சேர்க்கப்பட்டனர்.

இச்சம்பவம் கடந்த புதன் கிழமை இரவு இடம்பெற்றது. (இ-117)

# கொழும்பு செல்வோர் எண்ணிக்கை அதிகரிப்பு

திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் இருந்து கொழும்பு நோக்கிச் செல்வோர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

பெரும்பாலும் இளைஞர்களும், யுவதிகளுமே கொழும்பு செல்கின்றனர்.

இப் பகுதிகளில் படையினரின் கெடுபிடிகள் அதிகரித்து வருகின்றன என்று கூறப்படுகிறது. (இ-5-6)

# செய்திச் சாரம்

## மஞ்சள் காய்ச்சல் பரப்பும் நுளம்பு

கொழும்பு, செப். 11
ஆபிரிக்க நாடுகளில் மஞ்சள் காய்ச்சலைப் பரப்பும் இன நுளம்புகள் இலங்கையில் பரவலாகக் காணப்படுவதாக சுகாதார அமைச்சு அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

இலங்கையில் இதுவரை மஞ்சள் காய்ச்சலால் (Yellow fever) எவரும் பீடிக்கப்படவில்லை என்றும்—

மஞ்சள் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட ஒருவர் இலங்கைக்கு வந்தால். அக்காய்ச்சல் மோசமாகப் பரவும் அபாயம் நிலவுவதாகவும் இந்த அதிகாரிகள் எச்சரித்துள்ளனர். (இ-எ)

## ஜி.சி.ஈ பரீட்சை

கொழும்பு, செப். 11
வடக்கு - கிழக்கு நிலைமை சீராக்கியதும் அப்பகுதி மாணவர்களுக்கு என்று விசேட ஜீ சி ஈ சாதரணப் பத்திரப் பரீட்சை நடத்தப்படும் என்று பரீட்சை ஆணையாளர் ஆர்தர் வெதமுல்ல தெரிவித்தார். (இ-எ)

## பனங்கட்டி

வட்டுக்கோட்டை, செப். 11
சங்கானை தெங்கு,பனம் பொருள் அபிவிருத்தி நிலையம் பதநீரிலிருந்து தயாரிக்கும்பனங்கட்டியை சங்கானை ப. நோ. கூ. சங்கக் கிளைகள் மூலம் விநியோகிப்பதற்கு முன்வந்துள்ளது (இ-161)

## நிவாரண உதவி

பச்சிலைப்பள்ளி, செப். 11
கிளாலியிலுள்ள தேவாலயங்களிலும், பாடசாலையிலும் தங்கியுள்ள 680 குடும்பங்களைச் சேர்ந்த 2,500க்கு மேற்பட்ட அகதிகளுக்கு யாழ் மறை மாவட்ட மனித முன்னேற்ற நடு நிலையத்தினரால் மூன்றாம் கட்டமாக உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. (இ-117)

## வி. பி. சிங் சென்னை வருகை

சென்னை, செப். 11
பிரதமர் வி. பி. சிங் இம் மாதம் 16 ஆம் திகதி சென்னைக்கு விஜயம் செய்கிறார். (இ-எ)

## வெளிநாட்டுத் தபால்கள்

சாவகச்சேரி, செப். 11
சுமார் மூன்று மாதங்களின் பின்னர் சாவகச்சேரிப் பகுதியில் வெளிநாட்டுத் தபால்கள் விநியோகிக்கப்பட்டன. [இ 31]

## வயல் வெளியில் விழுந்த குண்டுகள்

சாவகச்சேரி, செப் 11
வெள்ளிக்கிழமை மாலை ஐந்துமணி அளவில் பத்து நிமிட இடைவெளியில் பொம்மர் இருதடவைகள் கைதடி நுணாவிலில் குண்டுகளைப் போட்டது.

குண்டுகள் வயல்வெளியில் விழுந்ததால் சேதம் ஏற்படவில்லை. [இ-3]

## சங்கானை ப.நோ.கூ.ச

வட்டுக்கோட்டை, செப். 11
சங்கானை ப. நோ. கூ. சங்கம் நெல்லைக் கொள்வனவு செய்து தனது கிளைகள் மூலம் பங்கீட்டு முறையில் விநியோகம் செய்து வருகிறது. (இ-161)

## நோயாளர் அதிகரிப்பு

கோப்பாய், செப். 11
கோப்பாய் அரசினர் வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்களின் எண்ணிக்கை கடந்த காலங்களை விட இப்போது பெருமளவு அதிகரித்துள்ளது. (இ - 72)

## முதலுதவி சிகிச்சை நிலையம்

திருநெல்வேலி, செப். 11
கோண்டாவில் வடக்கு வாகீஸ்வரி சன சமூக நிலையத்தில் பொதுமக்கள் நலன் கருதி முதலுதவி சிகிச்சை நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதனை மறைந்த விடுதலைப்புலி போராளி இன்சூரின் தாயார் திருமதி ம. நடராசா திறந்து வைத்தார். கோண்டாவில் பிரதேசப் பொறுப்பாளர் ராபிக்கும் கலந்து கொண்டார். (இ - 143)

## கைப்பணி பொருள்கள்

வட்டுக்கோட்டை சிவன் கோவிலடி வள்ளியம்மை ஞாபகார்த்த பவுன்டேசன் கண்ணாடி இழையிலான மூலப்பொருள்கள் மூலம் கைப்பணிப்பொருள்களை உற்பத்தி செய்து வருகின்றது. (இ-161)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். பல்கலைக்கழக

# வெளி மாவட்ட மாணவர்கள் பெரும் கஷ்ட நிலையில்

யாழ்ப்பாணம், செப். 11

யாழ். பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் வெளிமாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கடந்த ஜூனில் வடக்கு - கிழக்கில் யுத்தம் ஆரம்பமானதை அடுத்து பல்கலைக்கழகமும் இயங்கவில்லை அதே வேளை வெளி மாவட்ட மாணவர்கள் தங்களது சொந்த இடங்களுக்குச் செல்வதற்கான போக்குவரத்து வசதிகளும் தடைப்பட்டன.

இதனால் இந்த மாணவர்கள் யாழ்ப்பாணத்திலேயே தங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அதைத்தொடர்ந்து பணப் பற்றாக்குறை ஏற்பட்டது.

அறைகளில் தங்கியுள்ளவர்களுக்கு வாடகை, உணவு போன்றவற்றிற்குப் பணம் தேவைப்படுகிறது.

இந்த நிலையில் பல்கலைக்கழகத்தால் இம்மாணவர்களுக்கு கடன் உதவித் தொகை என்ற வகையில் 3 கட்டங்களாக 800 ரூபா வழங்கப்பட்டதாக மாணவர்கள் தெரிவிக்கின்றனர்.

விலைவாசிகள் உச்சத்தில் இருக்கும் இந்த வேளையில் இந்த 800 ரூபா ஒரு மாதத்திற்குத் தானும் தங்களுக்குப் போதாது என்று அவர்கள் கவலையுடன் கூறுகின்றனர்.

இக்கட்டான நிலையில் அகதிகளாக அவலப்பட்டுக் கொண்டிருக்கும் தங்களுக்கு எந்தவித நிவாரணமோ, பொது ஸ்தாபனங்களின் உதவியோ கிட்டவில்லை என்று பிரஸ்தாப மாணவர்கள் பெரும் கவலை தெரிவித்தனர்.

தங்கள் சொந்த மாவட்டங்களுக்குத் திரும்புவதற்கேனும் மார்க்கம் எதுவும் பிறக்காதா என்று அவர்கள் அங்கலாய்க்கின்றனர்.

(ஒ)

## கொம்படிவெளியில் மீண்டும் சீ-பிளேனிலிருந்து தாக்குதல்

ஆனையிறவு கொம்படி வெளியில் மீண்டும் சீ-பிளேனிலிருந்து துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

கடந்த 7ஆம்திகதி இச்சம்பவம் நடைபெற்றது.

பரா வெளிச்சம் போடப்பட்டு வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. அவ்வழியால் வந்த அம்புலன்ஸ் வாகனம் சேதத்துக்குள்ளானது. இருவர் காயமடைந்தனர்.

சைக்கிள் வியாபாரிகள் பற்றைகளில் மறைந்துகொண்டதால் காயம் இன்றித் தப்பினர். இத்தகைய தாக்குதல் சம்பவங்களை அடுத்து இவ்வழியால் உணவுப்பொருள்களைக் கொண்டுவருவதற்கு சைக்கிள் வியாபாரிகள் அஞ்சுகின்றனர். (இ-117)

## மட்டு. மாவட்டத்திலும் மண்எண்ணெய் தட்டுப்பாடு

### நெற் பயிர் அழிந்து வருகின்றது

மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்ணெண்ணெய் தட்டுப்பாட்டினால் நெற்பயிர் அறுவடை இன்றி அழிந்து வருகிறது.

நீண்ட நாட்களாக மின் விநியோகம் துண்டிக்கப்பட்டிருப்பதால் இங்கு மண்ணெண்ணெய்க்குத் தட்டுப்பாடு நிலவுகிறது.

தினமும் 2 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் மட்டக்களப்பிலுள்ள பெற்றோல் நிலையத்தில் மண்ணெண்ணெய் வாங்கக் காத்திருப்பதாகவும், ஆனால் ஒருவருக்கு ஒரு லீற்றர் வீதம் 500 பேருக்கே மண்ணெண்ணெய் வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

## ஷெல் வீச்சில் ஒருவர் காயம்

ஆனையிறவு முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல் இயக்கச்சிப் பகுதியில் விழுந்து வெடித்தபோது தோட்ட வேலையில் ஈடுபட்டிருந்த ஒருவர் காயமடைந்தார். (இ-117)

## இன்று முதல் பெர்மிட்

யாழ்ப்பாணம், செப். 11

யாழ் - உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள பாதிக்கப்பட்டவர்களுக்கான ''பெர்மிட்''டுக்கள் இன்று செவ்வாய்க்கிழமை முதல் ப.நோ.கூ. சங்க கிளைகள் மூலம் வழங்கப்பட உள்ளன.

இத்தகவலை யாழ் - உதவி அரசாங்க அதிபர் திரு. அ. சபாபதிப்பிள்ளை உதயனுக்குத் தெரிவித்தார்.

யாழ் - உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இடம்பெயர்ந்தும், தொழில் இழந்தும், வருமானம் இழந்தும் உள்ளவர்களுக்கான பெர்மிட்டுக்களே இன்று முதல் வழங்கப்படுகின்றன,

ஒருவர் கிராமசேவையாளர் வழங்கும்இலக்கத்தை பெற்று நிவாரணத்துக்கான தமது பெர்மிட்டைப் பெறலாம்என்றும் யாழ். உதவி அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

(இ 3 6)

## வயிற்றோட்ட நோயால் கிழக்கில் 29 பேர் பலி!

கொழும்பு, செப். 11

வந்தாறுமூலையில் உள்ள கிழக்கிலங்கைப் பல்கலைக்கழக அகதிமுகாமில் 29 தமிழர்கள் வயிற்றோட்ட நோயால் [''கொலரா''] உயிரிழந்திருப்பதாக ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன.

வயிற்றோட்ட நோய் பரவத்தொடங்கிய பின்னர் அதனைத் தடுக்க சுகாதார மற்றும் மருத்துவ உதவிகள் வழங்கப்படாததாலேயே அதிகமானோர் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(உ-எ)

## யாழ். ஆஸ்பத்திரி....

திரியில் நடந்த அவச்சாவுகளில் ஒன்று. யாழ் ஆஸ்பத்திரி பழைய இடத்திலேயே, வழமைநிலையில், இயங்கியிருந்தால்அந்தச்சிறுவனைக் காப்பாற்றி இருக்கலாமே என்று டாக்டர்களும் கவலைப்படும் மரணம்.

அந்தச் சிறுவன் சுவாசத் தடை நோயால் பீடிக்கப்பட்டிருந்தான்.

அந்தநோயால் பாதிக்கப்படுபவர்களுக்கு பத்துநாள் முதல் மூன்று மாதங்கள்வரை கூட இயந்திரம் மூலம் செயற்கைச் சுவாசம் அளித்து, சிகிச்சை செய்து உயிரைக் காப்பாற்ற முடியும். அப்படி பல நோயாளர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் (அது நகரத்தில் இயங்கிய போது) காப்பாற்றப்பட்டனர்.

செயற்கைச் சுவாசம் அளிக்க உதவும் இயந்திரங்கள் மானிப்பாய்க்கு மாற்றப்படவில்லை. அவ்வாறு செய்வதானால் அந்த இயந்திரங்கள் இயங்குவதற்கு 24 மணி நேரமும் குளிரூட்டப்பட்ட அறையில் வைக்கப்பட வேண்டும், 24 மணி நேரம் இடைவிடாத மின்சாரம் தேவை.

அந்த இயந்திரங்கள் முன்னர் யாழ். நகரில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் பொருத்தப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது. இப்போது மானிப்பாயில் இயங்கும் ஆஸ்பத்திரியில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவு என்ற நாமமே இல்லை.

அதனால் சிறுவன் ஜெயதரனுக்கு நேற்று நேர்ந்தகதி இன்னும் பலருக்கு ஏற்படலாம் என்று வைத்திய வட்டாரங்கள் கவலை தெரிவிக்கின்றன. (அ-15)

### தீவுப் பகுதி....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஊர்காவற்றுறை முதல் மண்டைதீவு வரையான இராணுவ நடவடிக்கையின் போது பொதுமக்கள் பலர் கொல்லப்பட்டனர். பெரும் எண்ணிக்கையானோர் படுகாயமுற்றனர். அவர்களை சிகிச்சைக்காக யாழ் பகுதிக்கு கொண்டு வர முடியாமல் இருந்தது. அதனால் பலர் இறந்ததும் உண்டு.

ஆனால் பாதுகாப்பு அமைச்சு அங்கு செல்வதற்கு முற்றாக அனுமதி தர மறுத்துவிட்டது. ஒரு தடவை யாழ். நகரிலிருந்து காரைநகர் வரை சென்று விட்டு அனுமதி மறுக்கப்பட்டதால் செஞ்சிலுவைக் குழுவினர் திரும்பியதும் உண்டு.

சுமார் 20 நாட்களுக்குப் பின்னர் இப்பொழுது பாதுகாப்பு அமைச்சுக்கு அந்த மக்கள் மீது காலம் கடந்த ''பரிவு'' பிறந்திருக்கிறது.

பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைத்ததைத் தொடர்ந்து நேற்று தீவுப் பகுதிக்கு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு சென்றதாக அறியவந்தது. (ஒ-5)

## உண்ணாவிரதம் மறியல் போராட்டம்

யாழ்ப்பாணம், செப். 11

தமிழ் மாநில அகதிகள் பாதுகாப்பு மன்றம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9மணி முதல் பிற்பகல் 4 மணி வரை நல்லூர் கோவில் வீதியில் உள்ள அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயத்தில் உண்ணாவிரதமும் மறியற்போராட்டமும் நடத்த இருக்கிறது.

இந்தியா- ஸ்ரீலங்காவின் உதவியுடன் சர்வதேச அமைப்புகளின் மேற்பார்வையில் இலங்கையில் அகதி முகாம் நிறுவ ஐக்கிய நாடுகள் சபை ஒப்புக் கொண்டதைக் கண்டித்தும்-

அகதிகள் நிலை குறித்து அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயத்தில் சமர்ப்பிக்கப்பட்ட மகஜர்கள் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்படாததை ஆட்சேபித்தும் இன்றைய போராட்டம் நடத்தப்படுவதாக மன்ற அமைப்பாளர் திரு. எஸ். கஜேந்திரநாத் கூறினார். (இ-30)

## தீவுப் பகுதிக்கு மருந்துகள் அனுப்பப்பட்டன

யாழ்ப்பாணம், செப், 11

புங்குடுதீவு, ஊர்காவற்றுறை, வேலணை சுகாதாரப் பணிப்பாளர் பிரிவுக்கு அத்தியாவசிய மருந்துப் பொருள்கள் நேற்று இரண்டாவது தடவையாக யாழ் செஞ்சிலுவைச்சங்கத்தொண்டர்களால் எடுத்துச் செல்லப்பட்டன.

இவற்றுடன் போரூட் அமைப்பினால் வழங்கப்பட்ட உலர் உணவுப் பொதிகளும் மண்ணெண்ணையும் அனுப்பப்பட்டதாகச் செஞ்சிலுவைச்சங்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார். [ஒ,5]

### மட்டக்களப்பில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யில் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் இந்தப் படுகொலைச் சம்பவம் எப்போது நடைபெற்றது என்ற விபரம் அறிவிக்கப் படவில்லை. (உ-எ)


## மரண அறிவித்தல்

### கோபாலபிள்ளை இராசப்பா

### இராசப்பா சித்திரா B Sc. (மகள்)

சுருவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், 14, அன்னசத்திர லேன், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய கோபாலப்பிள்ளை இராசப்பா அவர்களும்; அவர்களுடைய அருமை மகள் சித்திரா அவர்களும் 8 - 9 - 90 சனிக்கிழமை அன்று இரவு 10 30 மணியளவில் அகால மரணமானார்கள். (இராசப்பா — இவர் காலம் சென்ற கோபாலபிள்ளை-அன்னப்பிள்ளை அவர்களின் அருமை மகனும்; சரவணை மேற்கைச் சேர்ந்த காலம்சென்ற மூத்ததம்பி, செல்லமுத்து அவர்களின் அன்பு மருமகனும், நாகேஸ்வரி (இந்திராணி) அவர்களின் அன்புக் கணவரும்; கொழும்பு ஏகாந்தன் றேடேர்ஸ் உரிமையாளர் ஏகாம்பரம், ஸ்ரீமுருகன் ஸ்ரோர்ஸ் தம்பிப்பிள்ளை, செல்லம்ஸ் ஸ்ரோஸ் பற்பநாதபிள்ளை, காலம் சென்ற செல்லம்மா, சுப்பையா கமலம், கந்தையா பொன்னம்மா, சபாரத்தினம், இந்திராவதி, திருநாவுக்கரசு, இராசலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும், பாலச்சந்திரன் லதா (சாரதா) (கனடா), சித்திரா ஆகியோரின் அருமைத்தகப்பனாரும், சஜனின் பேரனும், பாலசிங்கம் பாலச்சந்திரன் (கனடா) அவர்களின் அன்பு மாமனாரும், மூத்ததம்பி மார்க்கண்டு. துரைராசா செல்வராணி, சோமசுந்தரம் புஸ்பராணி தில்லைநடேசன், தங்கேஸ்வரி, மார்க்கண்டு, காமினி, ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார். இருவருடைய ஈமக்கிரிகையின் 9 - 9 - 90 ஞாயிற்றுக்கிழமை அன்று கோம்பயன் மணல் மயானத்தில் நடைபெற்றது. உற்றார், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் எல்லோரும் இவ் மரண அறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

திருமதி இராசப்பா.

(14179)



## மரண அறிவித்தல்

### இராமுப்பிள்ளை ஐயாத்துரை

வவுனியா கந்தசாமி கோவில் வீதியைச் சேர்ந்த இ. ஐயாத்துரை 09-09-1990 அன்று சிவபதம் அடைந்தார்.

இவர் ஊரெழு ஓய்வுபெற்ற ஆசிரியை நாகம்மாவின் அன்புக் கணவரும்; இராமுப்பிள்ளை சின்னப்புவின் சகோதரரும்; காலம்சென்ற மு. சுப்பிரமணியத்தின் [உதவி முகாமையாளர், விவசாயத் திணைக்களம்] மைத்துனரும்; நவரஞ்சிதமலர், ஜெயலட்சுமி, இரத்தினசிங்கம், வீரசிங்கம் [ஜேர்மனி], ராஜாம்பாள் [அவுஸ்திரேலியா], குலவீரசிங்கம் [மின்சாரப் பொறியியலாளர், லண்டன்] ஆகியோரின் அன்புத் தந்தையும்; காலம்சென்ற சி. இராமச்சந்திரன் [சுகாதாரத் திணைக்களம்], இ. சேனாதிராஜா [தேசிய வீடமைப்பு அதிகார சபை உதவி முகாமையாளர், மன்னார்], அன்னலட்சுமி [தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலை], தனநாயகி [ஜேர்மனி], ஞானரூபி [இரசாயன பொறியியலாளர், லண்டன்], Dr. A. P. தில்லைநடேசன் [பொறியியலாளர், அவுஸ்திரேலியா] ஆகியோரின் அன்பு மாமனாரும்; காலம்சென்ற சக்திதாஸ், ரகுதாஸ் [ஜேர்மனி], ரஜனி [லண்டன்], மோகன் [அவுஸ்திரேலியா], மேகலா, நிமால், அனுபா, வினோதினி, தர்மேந்திரா, வினோத். தர்ஷா, விக்கிசா, துவாரகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 10-09-1990 நேற்று ஊரெழுவில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

தகவல்:

ஊரெழு மேற்கு, சுன்னாகம்.

இரத்தினசிங்கம் தம்பதிகள்

(13853)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 11-09-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org